

சென்னையில் 15.08.2024 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் கொள்ளுப்பேத்தி திருமதி க.மனோசாந்திக்கு மதுரை தேவநேயப் பாவாணர் மணிமண்டபத்தில் கருணை அடிப்படையில் அலுவலக உதவியாளராகப் பணி நியமன ஆணையை வழங்கினார். இந்நிகழ்வின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், கூடுதல் இயக்குநர்கள் ச.செல்வராஜ், மு.பா.அன்புச்சோழன் ஆகியோர் உடனிருந்தனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (16.08.2024) போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் பணிக்காலத்தில் இறந்த பணியாளர்களின் 8 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில், போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ், இணை மேலாண் இயக்குநர் செ.நடராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

### தமிழ்நாட்டிற்கு மேலும் தொழில் முதலீடுகளை ஈர்க்க

# முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகஸ்ட் 27-அன்று அமெரிக்கா பயணம்!

## தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

சென்னை, ஆக.17-

தமிழ்நாட்டிற்கு மேலும் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற 27ஆம் தேதி அமெரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார். 17 நாட்கள் பயணத்தின்போது, முன்னணி நிறுவனங்களின் தலைவர்களை சந்தித்து முதலீடுகள் குறித்து பேசும் முதலமைச்சர் அவர்கள், அமெரிக்க வாழ் தமிழர்களையும் சந்தித்து கலந்துரையாடுகிறார்.

தமிழ்நாட்டை, 2030ஆம் ஆண்டுக்குள் 1லட்சம் கோடி டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக மாற்றுவது என்ற இலக்குடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறார். தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வண்ணம், ஏற்கனவே, சிங்கப்பூர், ஜப்பான், துபாய், ஸ்வீடன், ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகளுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இதன்மூலம் பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் முதலீடுகளும் தமிழ்நாட்டிற்குகிடைத்தன.

கடந்த ஜனவரி மாதம் சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டா ளர்கள் மாநாட்டில் 6.64 லட்சம் கோடி ரூபாய் மதிப்பில் முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இதன் மூலம் சுமார் 27 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், தமிழ்நாட்டுக்கு மேலும் தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வருகிற 27ஆம் தேதி முதல் 17 நாட்கள் அமெரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

சென்னையில் இருந்து 27-ஆம் தேதி அமெரிக்கா செல்லும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 28ஆம் தேதி அங்குள்ள சான் பிரான்சிஸ்கோ செல்கிறார். 28ஆம் தேதியிலிருந்து செப்டம்பர் 2ஆம்தேதி வரை சான் பிரான்சிஸ் கோவில் முக்கிய முன்னணி நிறுவனங்களின் தலைவர்களை, முதலமைச்சர் சந்தித்துப் பேச உள்ளார். ஆகஸ்ட் 29ஆம் தேதி சான் பிரான்சிஸ்கோவில் நடைபெறும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஆகஸ்ட் 31ஆம் தேதி அமெரிக்க வாழ் தமிழ்நாட்டு மக்களை சந்தித்து கலந்துரையாடுகிறார். செப்டம்பர் 2ஆம் தேதி சான்பிரான்சிஸ்கோவிலிருந்து சிக்காகோ செல்லும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், செப்டம்பர் 12ஆம் தேதி வரை அமெரிக்காவில் பார்ச்சூன் 500பட்டியலில் உள்ள சர்வதேச முன்னணி நிறுவனங்களின் முதலீட்டாளர்களை சந்தித்து தொழில் முதலீடுகள் குறித்து பேச உள்ளார்.

செப்டம்பர் 7ஆம் தேதி சிக்காக்கோவில் அமெரிக்க வாழ் தமிழர்களை சந்தித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துரையாட உள்ளார். உயர்தர வேலை வாய்ப்பு மற்றும் உயர்தர முதலீடு என்ற முக்கிய குறிக்கோளுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் அமெரிக்க சுற்றுப்பயணம் அமைய உள்ளதாக தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்துள்ளார்.

### தேவநேயப் பாவாணரின் கொள்ளுப்பேத்தி

# திருமதி க.மனோசாந்திக்கு - கருணை அடிப்படையில் அரசுப்பணி!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பணி ஆணையை வழங்கினார்!

சென்னை, ஆக. 17-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் கொள்ளுப்பேத்தி திருமதி.க.மனோசாந்திக்கு மதுரை தேவநேயப் பாவாணர் மணிமண்டபத்தின் அலுவலக உதவியாளராக கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்து தமிழ் வளர்ச்சி(ம) செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அதற்கான பணி நியமன ஆணையை வழங்கினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தமிழ் மொழியின் வேர்ச்சொல் ஆராய்ச்சி வித்தகர், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களை 1974ல் தமிழ் அகரமுதலித் திட்ட இயக்குநராக நியமனம் செய்து பெருமைப்படுத்தினார். மேலும், மதுரை மாவட்டத்தில் தேவநேயப் பாவாணர் திருவுருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைத்து 30.10.2007 அன்று திறந்துவைத்து, அவரது வாரிசுதாரரான திருமதி. ஏ.டி.எம்.டி.பரிபூரணம் என்பவருக்கு செய்தி மக்கள் தொடர்புத்துறையில் பணி நியமன ஆணையினை வழங்கினார். மேலும், பாவாணரின் நூல்களை அரசுடைமையாக்கி, அவரது மரபுரிமையர்க்கு இருபது இலட்சம் ரூபாய் பரிவுத்தொகை வழங்கிச் சிறப்பித்தார்.

திருமதி.ஏ.எம்,டி.பரிபூரணம், மதுரை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தேவநேயப் பாவாணர் மணிமண்டபத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வந்தார். அவர் உடல் நலம் குன்றி மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்த நிலையில் கிகிச்சை பலனின்றி 20.11.2022 அன்று இயற்கை எய்தினார்.

திருமதி.ஏ.எம்,டி.பரிபூரணம் அவர்களின் மகளும், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் கொள்ளுப் பேத்தியுமான திருமதி.க.மனோசாந்தி என்பவர், கருணை அடிப்படையில் தமக்குப் பணி நியமனம் கோரி முதலமைச்சர் அவர்களுக்கு விண்ணப்பம் அளித்திருந்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் வாரிசுதாரர் திருமதி.க. மனோசாந்தி என்பவரின் விண்ணப்பித்தினை ஏற்று, பரிவுடன் பரிசீலித்து, அவருக்கு மதுரை மாவட்ட மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் மணிமண்டபத்தில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடத்தில் கருணை அடிப்படையில், பணி நியமனம் செய்து ஆணையிட்டுள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ள ஆணையின் படி, தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் கொள்ளுப்பேத்தி திருமதி.க. மனோசாந்திக்கு மதுரை தேவநேயப் பாவாணர் மணிமண்டபத்தில் கருணை அடிப்படையில் அலுவலக உதவியாளராகப் பணி நியமனம் செய்து அதற்குரிய ஆணையை வழங்கினார்.

பணிநியமன ஆணையை பெற்றுக்கொண்ட திருமதி.க. மனோசாந்தி தமக்கு பணி நியமனம் வழங்கியுள்ள முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களுக்கும் தம் குடும்பத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவிப்பதாக மகிழ்ச்சியுடன் கூறினார்.

இந்நிகழ்வின்போது, தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை செயலாளர் வி.ராஜாராமன் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன் கூடுதல் இயக்குநர்கள் ச.செல்வராஜ், மு. பா.அன்புச்சோழன், ஆகியோர் உடனிருந்தனர்.

### நெல்லை கிழக்கு மாவட்டம் – விக்கிரமசிங்கபுரத்தில்

# ‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் – கழகப் பேச்சாளர்கள் சிறப்புரை!

நெல்லை.ஆக.17.

நெல்லை கிழக்கு மாவட்டம் விக்கிரமசிங்கபுரம் நகர தி.மு.க.சார்பில் திராவிட மாடல் ஆட்சியின் மூன்றாண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டங்கள் நெல்லை கிழக்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் நடைபெறுகிறது. அதன் படி 19.08.2024,21.08.2024, 23.08.2024, 25.08.2024 ஆகிய நான்கு நாட்கள் நகர செயலாளர் கணேசன் தலைமையில் நடைபெறுகிறது.நகர இளைஞரணி அமைப்பாளர் செல்வ சுரேஷ் பெருமாள் வரவேற்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்வுகளில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன்,தலைமை கழக பேச்சாளர்கள் உடன்குடி தனபால், நெல்லை மணி, தூத்துக்குடி சரத்பாலா, நெல்லை ரவி ஆகியோர் பங்கேற்று சிறப்புரை யாற்றுகின்றனர்.

நிகழ்ச்சி பற்றிய விவரம் வருமாறு.

19.08.2024 திங்கட்கிழமை மாலை 6 மணி பசுக்கிடைவிளையில் மாவட்ட தொழிலாளரணி துணை அமைப்பாளர் பிரகாஷ், சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ஜெயராஜ்,தொண்டரணி துணை அமைப்பாளர் வாசு ஜெயராம், ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் நிகழ்வில் தலைமை கழக பேச்சாளர் உடன்குடி தனபால் உரையாற்றுகிறார்.

21.08.2024 புதன்கிழமை மாலை 6:00 மணி டாணா பொதிகை காலணியில் மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர் பொன்ராஜ்,அயலக அணி துணை அமைப்பாளர் சங்கரநாராயணன்,தொழிலாளரணி துணை அமைப்பாளர் மாரியப்பன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் நிகழ்வில் தலைமை கழக பேச்சாளர் நெல்லை மணி உரையாற்றுகிறார்.

23.08.2024 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு சந்தன மாரியம்மன் கோவில் முன்பு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் பிரபாகரன் இலக்கிய அணி தலைவர் வல்சகுமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் நிகழ்வில் தலைமை கழகப் பேச்சாளர் தூத்துக்குடி சரத்பாலா உரையாற்றுகிறார்.

25.08.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 6:00 மணி தாய்சினீஸ் தியேட்டர் முன்பு அருள்பிரகாஷ்,அருண்சீலன், சிவகுமார், மாரிகுமார்,பாலமுருகன் அசோக் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் நிகழ்வில் தலைமை கழக பேச்சாளர் நெல்லை ரவி உரையாற்றுகிறார்.

நிகழ்வில் மாநில தேர்தல் பணி செயலாளர் ராஜம்ஜான்,நகர அவைத் தலைவர் அதியமான், மாவட்ட பிரதி இசக்கி பாண்டியன்,நகர பொருளாளர் ரவி, துணை செயலாளர்கள் ஐயப்பன், செல்வகுமாரி,நகர்மன்ற துணை தலைவர் திலகா உள்பட வார்டு கழக செயலாளர்கள்,நகரமன்ற உறுப்பினர்கள், மகளிர் அணி, வார்டு பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

### புதுக்கோட்டை வடக்கு - தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில்!

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பேச்சுப்போட்டி!

## மாவட்ட அமைப்பாளர்கள் சு.சண்முகம், த. மணிராஜன் அறிக்கை!

புதுக்கோட்டை, ஆக. 17 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சு.சண்முகம், தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் த. மணிராஜன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. இளை ஞர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா பேச்சுப் போட்டி கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆலோசனைப்படி கழக இளைஞர் அணி செயலா ளரும் இளைஞர் நலன் மற் றும் விளையாட்டு மேம் பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின் படி இன்று (17.08.2024 சனிக்கிழமை) காலை 9 மணி அளவில் புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா திருமண மண்டபத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத் துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி தலைமையிலும், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக் கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்ல பாண்டியன் , மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம். அப்துல்லா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா, பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், புதுக்கோட்டை மாநகர செயலாளர் ஆ.செந்தில், மேயர் திலகவதி செந்தில், துணை மேயர் எம். லியாகத் அலி, இளைஞரணி அமைப்பாளர்கள் சு. சண்முகம், த. மணிராஜன்,


மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மு. கலைஞர் கருணாநிதி, இளஞ்சேரன் முத்துசாமி, முகம்மது ரபீக் , விளாப்பட்டி சிவா, அன்சாரி பாஷீத், இரா. தமிழ் ராசு, நசுருதீன், க.க விக்குமார். அருண் சேகர், இளையராஜா ஆகியோர் முன்னிலை யிலும் நடை பெறுகிறது. போட்டியின் நடுவர்களாக பொன். முத்துராமலிங்கம், கோவி. செழியன் எம்.எல்.ஏ, கவிஞர் சல்மா, மதுரை பாலா, மருத்துவர் சஃபி சுலைமான், கணேஷ் பாபு ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

மேலிட பார்வையாளராக மாநில இளைஞரணி துணைச் செயலாளர் நா.இளையராஜா கலந்து கொள்கிறார். இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை வடக்கு தெற்கு மாவட்டத்தை சேர்ந்த ஒன்றிய, மாநகர, நகர இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு தங்களது அறிக்கையில் கூறி உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தம்பி ஏ. தேவேந்திரன்

**ஆகஸ்ட் 17 (1995)**



**திராவிட இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு தி.மு.கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகப் பணியாற்றியவர். தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகவும், தொடர்ந்து 38 ஆண்டுகளாக நகர்மன்ற உறுப்பினராகவும், மயிலாடுதுறை நகர்மன்றத் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**கல்லக்குடி, கருப்புக் கொடி, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று 17 முறை சிறை சென்றவர்.**

**“மதுரைக்கு முத்து, மாயூரத்திற்கு தம்பி தேவேந்திரன்” என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.ஏ. மதியழகன்

**ஆகஸ்ட் 17 (1983)**



**தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோர் வழிநடந்த தன்மானத் தளகர்த்தர். தலைவர் கலைஞர் அவர்களது உடன்பிறப்பு, நாற்பதாண்டு காலத்திற்கும் மேலாக திராவிடர் நலம்நாடி உழைத்த பெருமகனார்.**

**இயக்கப் பணியிலும், அறப்போராட்டத்திலும் முன்னின்று செயலாற்றி மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் வழிகாட்டியாக விளங்கியவர்.**

**தமிழ்நாடு அமைச்சராகவும், சட்டப்பேரவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**“தமிழ் இனம் காக்க – மொழி காக்க தடந்தோள் உயர்த்திய தளபதி” என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**